தமிழகம்

சிறப்பு ஆசிரியர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்

மலர் 4] சோபகிருது ஐப்பசி 18 4—11—63 கிழமை இதழ். விலை – 10 காசுகள். [இதழ் 49

குழந்தைகளிடத்தில் நல்ல சமய உணர்வை வளர்த்தால் பிற்காலச் சமுதாயம் சிறந்து வாழ முடியும்

அருள்நெறித் திருப்பணிமன்றக் கல்வியகங்களின் திருமுறை விழாவில் தவத்திரு அடிகளார்

அருள்நெறித் திருப்பணி மன்றக் கல்வியகங்களின் திருமுறை விழாவும், வார வழிபாட்டுக் கழக நான்காம் ஆண்டு விழாவும் குன்றக்குடி திருமுருகன் அருள்நெறி ஆசிரியைப் பயிற்சிப்பள்ளி அநபாய சோழன் அரங்கில் 3 — 11 — 63ல் பலவான்குடி திரு. கும. சுப்பிரமணியன் செட்டியார் எம்.ஏ., தலைமையில் நடைபெற்றது. அடிகளார் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. அ. சோமசுந்தர முதலியார் அனைவரையும் வரவேற்றார். அறநிலைய ஆணையர் திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்கட்கு கல்வியகங்களின் சார்பில் வரவேற்பிதழ் படித்துக் கொடுக்கப் பெற்றது.

தலைவர் பேசுகையில், ''சைவ பரம்பரையில் வந்தது இத் திருமடம்; நமது அடிகளார் அவர்கள் அருளாட்சி செய்யத் தொடங்கிய காலந் தொட்டு, தமிழகம் அல்ல- இந்தியா அல்ல - கீழ்நாட்டு நாகரிகம் பரவிச் செழித்த இடங்களிலெல்லாம் இத்திருமடத்தின் சிறப்பு பரவத்தொடங்கியது.

அன்று இங்கு பள்ளிக்கூடம் இல்லை; இன்றோ, 1000 பிள்ளைகள் படிக்கவசதி இருக்கிறது. ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி தொடக்கப் பள்ளி - புண்ணிய விடுதி - இன்னும் எத்தனையோ நிறுவனங்கள். அனைத்திற்கும் காரணம் நம் அடிகளார் அவர்கள். தமிழகத்தில்நமது ஆணையர் அவாகள் பதவி ஏற்ற காலந்தொட்டு நமது சைவத் திருமுறைகள் நல்ல இடத்தைப்பெற்றன'' என்று கூறினார்.

அடுத்து திருமுறையில் தொண்டு என்பது பற்றி மாணவன் கோ. சீனிவாசனும், திருமுறையில் பெண்மை என்பதுபற்றி ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி மாணவி குமாரி சொர்ணவல்லியும் பேசினர்.

பின்னர் தவத்திரு அடிகளார் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது;

பொதுவாக, சமய நிலையங்கள் சமுதாயத்தை மையமாகக் கொண்டு இயங்க வேண்டும்என்றவிருப்பத்தின் காரணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற வேலைகளை நாம் ஆண்டுக்காண்டு விமரிசனம் செய்து புதுமைகளைச் சேர்த்துக் கொண்டு தவறுகளைக் குறைத்துக் கொண்டு வளர்கிறோம்.

(10-ம் பக்கம் பார்க்க)

அப்பர் தரும் விருந்து:

சொல்லுக! பேசுக!

முழுக்க முழுக்கக் குறையுடையவர்களேயோ, முழுக்க முழுக்க நிறையுடையவர்களேயோ நாம் காண்பதரிது. குறையும், நிறையும் கலந்தேதான் இருக்கும். ஒருவரது குறைகளை மற்றவர்களிடத்துப் பேசுவது இழிந்த பண்பு; ஒருவரது குணங்களை அவரிடத்து நேரிலேயே சொல்லுவது முகமன். மனித சமுதாயத்திற்கு இவை இரண்டுமே நல்லதல்ல. எனவே, ஒருவரிடத்துக் காணும் குற்றங்களை அவரிடமே நேரில் 'பேசி'த் திருத்த முயற்சிப்பதும், அவரிடத்துக் காணும் குணங்களை — சிறந்த பண்புகளை மற்றவர்களிடத்துச் 'சொல்லி'ப் பாராட்டுவதுமே சிறந்த பண்பு. மிக்குயர்ந்த இந்தச் சமுதாயப் பண்பை யுணர்த்தும் அப்பரடிகளின் அழகிய பாடல் இதோ:

குணங்கள் சொல்லியும் குற்றங்கள் பேசியும்
வணங்கி வாழ்த்துவர் அன்புடை யாரெலாம்
வணங்கி வான்மலர் கொண்டடி வைகலும்
கணங்கள் போற்றிசைக் குங்கரக் கோயிலே

வாழ்த்துகிறோம்

திரு. நல்லதம்பி பி. ஏ. பி. டி. க்கும் குமாரி சரசுவதி பி. ஏ., பி. டி. க்கும் திரு. இராமாநுசம் பி. ஏ., பி. டி. க்கும். குமாரி கற்பகம் பி.ஏ., பி. டி. க்கும் தஞ்சையில் 28—10—63ல் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. தவத்திரு அடிகளார் அவர்கள் மணமக்களைப் பாராட்டி வாழ்த்தினுர்கள்.

பேராசிரியர் திரு. வெங்கடாசலபதி அணவர்க்கும் நன்றி கூறினுர்.

சென்னை அரசினர் கல்லூரி உதவிப் பேராசிரியர் திரு. இ. பி. மாரியப்பன் எம். ஏ., க்கும் கும்பகோணம் அரசினர் கல்லூரி உதவிப் பேராசிரியை குமாரி ருக்மணி எம். ஏ. க்கும் 30—10—63ல் எட்டயபுரத்தில் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திரு. கே. பி. எஸ் நாராயணன், எட்டயபுரம் திரு. தி. முத்துக்கிருஷ்ணன், சாத்தூர் வில்லிசை வேந்தர் ச.பா. பிச்சைக்குட்டி ஆகியோரும் மற்றும் பலரும் மணமக்களைப் பாராட்டினர். தவத்திரு அடிகளார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினுர்கள். மணமகன் திரு. இ. பி. மாரியப்பன் அணவர்க்கும் நன்றி கூறினுர்.

புதுமணத் தம்பதிகட்கு நம் உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

தமிழகம்

அன்பாலே மக்கள்குலம் இணைந்து வாழும்
அருள்நெறியைப் பரப்புதலே எங்கள் நோக்கம்

மலர் 4] 4—11—63 [இதழ் 49

சோஷலிசபாணிச் சமுதாயம்மலர

நாட்டில் பல்வேறு படிகளிலுமுள்ள ஏற்றத் தாழ்வுகள் நீங்காதவரை சோஷலிச சமுதாய அமைப்பு முயற்சியில் வெற்றிகாண முடியாது. இதனை அண்மையில் கூடிய ஜெயப்பூர் காங்கிரஸில், ஆய்வுக்குழு திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டது. சோஷலிச சமுதாய அமைப்பிற்கு ஏற்றத்தாழ்வுகள் நீங்க வேண்டும்-வர்க்க பேதங்கள் ஒழிய வேண்டும்-சுரண்டல் தொலைய வேண்டும் என்று பலர் பலவாறுகப் பொருள் கூறி வந்தார்கள். இப்போது கையூட்டு இல்லாமல் எல்லாரும் எல்லாத் தேவைகளையும் பெற்று வாழ்வதுதான் சோஷலிச சமுதாய அமைப்பின் வெற்றிக்கு அடிப்படையாகும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

"பாபம் செய்யாதே என்று உரத்த குரலிலே பேசுகிறது மதம்; ஆனால் பாபம் செய்கின்ற சூழ்நிலையில் ஒருவனை நிறுத்தி விட்டுப் பாபம் செய்யாதே என்றால் அது நியாயமா? பாபம் செய்யாமல் தடுக்க வேண்டும் என்றால், பாபம் செய்கின்ற சூழ்நிலையைக் காப்பாற்றி வருகிற சமுதாயத்திற்குத் தண்டனை கொடுக்க வேண்டாமா?

"பொறாமைப் படுவது தவறு என்று கூறுகிறோமே, பிறர்பார்த்துப் பொறாமைப் படும்படியாக நடந்துகொள்ளுவதும் தவறு தானே?"

'.என்று வணக்கத்திற்குரிய நமது அருள்நெறித் தந்தை அவர்கள் அடிக்கடி கேட்பதுண்டு. ஆம். ஓர் ஒழுக்கம் என்றால், அதைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் இருசார்பினருக்கும் உண்டு இருசார்பினரும் காப்பாற்ற முன் வந்தால்தான் எந்த ஒரு ஒழுக்கத்தையும் காப்பாற்ற முடியும்—வளர்க்க முடியும்.

இந்தக் கருத்தை வலியுறுத்துவது போல, மத்திய உள்துறை அமைச்சர் திரு. குல்சாரி நந்தா அவர்கள், புதுடில்லியில் இலஞ்ச ஒழிப்புத் தலைவர்களும், மத்தியப் புலன் விசாரணைத் துறைத் தலைவர்களும் பங்கு கொண்ட ஒரு மாநாட்டில் குறிப்பிட்டிருக்கிறார்.

தேசிய அடிப்படையில் கையூட்டு ஒழிப்பு மிகவும் முக்கியமானது என்பதில் ஐயமில்லை. மக்களாட்சி நடைபெறுகிற ஒரு நாட்டில், கையூட்டுக் கொடுப்பதும், கையூட்டுப் பெறுவதும் குற்றம்தான். இன்றோ, நம் நாட்டில் சாதாரண மக்கள் மட்டுமல்ல-வசதி படைத்தவர்களும் கூடக் கையூட்டுக் கொடுக்கின்ற நிலை இருக்கத்தான் செய்கிறது. அமைச்சர் கூறியுள்ளது போல, ஏழைகள் சில சமயங்களில் சிறு சலுகைகளைப் பெறுவதற்காகக் கையூட்டுக் கொடுக்கிறார்கள். செல்வந்தர்கள் விரும்பத்தகாத முறையில் தனிச் சலுகைகளைப் பெறக் கையூட்டுக் கொடுக்கின்றனர். இது வருந்தத் தக்கதுதான். கையூட்டுக் கொடுப்போரும் கையூட்டுப் பெறுவோரும் குற்றவாளிகளே, எனவேதான் அமைச்சர் கூறியிருக்கிறார், "இருசார்பினரும் கையூட்டுக் கொடுப்போரும், கையூட்டுப் பெறுவோரும் தண்டிக்கப் பெறவேண்டும்" என்று. உண்மைதான். எனினும், இருசார்பினருக்கும் உண்மையான மனமாற்றம் ஏற்பட வேண்டும்-இருசார்பினரும் தத்தமது பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து, செயலாற்ற முன்வரவேண்டும். அப்போதுதான், கையூட்டொழிப்புத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறும்! அந்த வெற்றியின் அடித்தளத்திலே தான் சோஷலிச பாணிச் சமுதாயம் அமையமுடியும்.

—துணை ஆசிரியர்

வாழ்விக்க வந்தோர் வரலாறு

24. மெய்ப்பொருளார்

(சென்ற வாரத்தொடர்ச்சி)

வஞ்சகன் முத்தநாதன் வாயிலுள் நுழைந்தபோதே மனம் அங்கு வைத்த தத்தன், நொடிப்பொழுதில் மன்னர் பெருமானை அணுகி, வஞ்சகனை வாளால் எறியப் போனான்; செங்குருதி பொங்கத் தரையிலே விழப்போகும் மெய்ப்பொருளார், 'தத்தா! இவர் நம்மவர்!' என்று தடுத்தார் - தரையிலே சாய்ந்தார். வேதனையெய்தி விழ்ந்த வேந்தரால் விலக்கப் பெற்ற தாதனும் தத்தன், மெய்ப்பொருளாரை வணங்கித் தாங்கி, 'மன்னர் பெருமானே! நான் யாது செய்தல் வேண்டும்?' என்று வினவினான். செங்குருதி வெள்ளத்திற் கிடந்த மெய்ப்பொருளார், 'தத்தா! சிவனடியாராகிய இவர்க்கு எவராலும் எத்தகைய தீங்கும் ஏற்படாமல் பாதுகாத்துக் கொண்டுபோய் விட்டுவா' என்று ஆணையிட்டார். ஆணையின் வண்ணம் தத்தன், அந்த வஞ்சகனை அழைத்துச் சென்றான்.

அரண்மனையில் நடந்த இந்நிகழ்ச்சி ஊரெங்கும் பரவியது; செய்தியைக் கேள்வியுற்றவர்கள் அனைவரும் நெஞ்சம் கொதித்து, அவ்வஞ்சகனைச் சூழ்ந்து கொண்டனர். தத்தனோ, மன்னர் பெருமானின் ஆணை இதுவென எடுத்துக்கூறி அவர்களையெல்லாம் தடுத்தான். நகரைக் கடந்து, காட்டை அடைந்தனர். கொடுஞ் செயல் புரிந்த அந்தக் கொடியவனை மக்கள் நடமாட்டம் இல்லாத - வாளேந்தி மக்கள் வாராத ஓரிடத்தே கொண்டுபோய் விட்டு விட்டு, நாயனாரிடத்தே வந்து செய்தியைக் கூறினான்.

இந்தச் செய்தியைக் கேள்வியுற்று, 'இன்றைக்கு ஐயன் செய்தது யார் செய்ய வல்லரர்?' என்று கூறித் தத்தனைப் புகழ்ந்தார். அரசியல் ஆயத்தார்களையும், மற்றுமுள்ள அன்பர்களையும் பார்த்து, 'விதியினாலேபரவிய திருநீற்றன்பைப் பாதுகாத்துய்ப்பீர்!' என்று அறிவுறுத்திப், 'புரவலர் மன்றுளாடும் பூங்கழல் சிந்தை செய்தார்.' இமயப் பாவையின் துணைவரான எம்பிரான், மெய்ப்பொருள் நாயனார் எண்ணிய வண்ணமே அவர்க்குக் காட்சி தந்தருளித் தமது அருட்கழல் நிழலில் சேர்த்துக் கொண்டார். இன்னுயிர் செகுக்கக் கண்டும் எம்பிரான் 'அன்பர் என்றே நன்னெறி காத்த சேதி நாயனார்' சிறப்புப் பெற்றார்.

ஒருவர் செய்த தீமையைப் பொறுத்துக்கொள்வது சிறந்தது. பொறுமைப் பண்பு வேண்டும் என்பார்கள். ஆனால், மெய்ப்பொருளாரோ முத்தநாதன் இழைத்த கொடுமையைப் பொறுத்துக் கொண்டு சும்மா இருந்துவிடவில்லை; பொய்த்தவ வேடம் புனைந்து வந்த முத்தநாதனுக்குப் பிறராலும் தீங்கு நேரக்கூடாது என்று கருதினார். எனவேதான் அவர், 'தத்தா! சிவனடியாராகிய இவர்க்கு எவராலும் தீங்கு நேர்ந்துவிடாமல் பாதுகாந்துக் கொண்டுபோய் விட்டுவா' என்று தத்தனுக்கு ஆணையிட்டார்.

தீமையைப் பொறுத்துக் கொண்டதோடு. அத்தீமை புரிந்தவனுக்குத் தீங்கு நேர்ந்துவிடாமல் பாதுகாத்தனுப்பியது பொறுமையினும் மிக்குயர்ந்த பண்பு. அதுவே சால்பு. இதைத்தான்,

'இன்னா செய்தார்க்கும்
இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?'

என்றார் வள்ளுவப் பெருந்தகை.

நன்மைசெய்வதாக நினைத்துக் கொண்டு தீமைசெய்கின்ற புத்திசாலித்தனம் நமது நாட்டிலேதான் உண்டு

[23...10...63ல் தவத்திரு அடிகளார் அவர்கள் தாராபுரம் சன்மார்க்க சங்கத்தில் ஆற்றிய சொற்பொழிவின் தொடர்ச்சி]

‘கந்த கோட்டத்துவளர் மணியே உண்மணியே’! என்று கூறும் வள்ளலாருக்கு உருவ வழிபாட்டில் நம்பிக்கை கிடையாது என்று கூறிவிட முடியாது. அதை அவர் முழுக்க ஏற்றாரா இல்லையா என்பது வேறு. எனினும், திருவுருவ வழிபாடு, திருக்கோயில் வழிபாடு போன்றவற்றில் வள்ளலாருக்கு நம்பிக்கை இருந்தும் கூடப் பெரும்பான்மையான சன்மார்க்க சங்கத்தினர் திருக்கோயில் வழிபாட்டை வலியுறுத்தாமல் — அதுபற்றியே பேசாமல் தனியே ஓர் மடம் அமைத்து அங்கே ஒரு ஜோதியை வைத்து வழிபடுகின்றனர்-இராமலிங்க அடிகளை மட்டும் வைத்து வழிபடுகின்றனர். இந்நிலை இருப்பதனால், ஆண்டாண்டுக்காலமாக இந்த நாட்டின் பாரம்பரியத்தில் ஊறிக் கிடக்கும் திருக்கோயில் வழிபாடு காலப்போக்கில் அழிந்து விடுமோ என்ற அச்சத்தின் காரணமாகத்தான் அருள் நெறித் திருக்கூட்டத்தினர் சன்மார்க்க சங்கத்தில் சேர வெட்கப்படுவார்கள் - கூச்சப்படுவார்கள். சன்மார்க்க சங்கத்தினர் திருக்கோயில் வழிபடும், திருவுருவ வழிபாடும் தேவைதான் - தங்கட்கும் உடன்பாடுதான் என்கிற நிலைமையை உருவாக்கி அருள் நெறித் திருக்கூட்டத்தினரின் அச்சத்தைப் போக்கினால் இந்தச் சிக்கல் எளிதில் தீர்ந்துவிடக்கூடும் என்று நம்புகிறேன்.

அருள் நெறித் திருக்கூட்டமும், சன்மார்க்க இயக்கமும் மாறுபட்ட கருத்துடைய இயக்கங்கள் அல்ல. உடன்பாடான இயக்கங்கள்-துணை இயக்கங்கள் தாம்.வழி இயங்கங்கள் தாம். ஆதலின் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. சன்மார்க்க சங்கத்தினர் ஒரு பருவடிவத்திலே நின்று விடுகிறார்கள். அருள்நெறித் திருக்கூட்டம், மேலும் ஒரு ஆயிரம் ஆண்டுக்காலப் பாரம்பரியத்திலே தன்னைப்பின்னிப் பிணைத்துக் கொண்டிருக்கிறது. இந்த நாட்டில் திருக்கோயில்களைப் பேணிக்காக்க வேண்டும்- திருக்கோயில்களுக்கு வருகிறவர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும். திருக்கோயில்களுக்கு வருகிறவர்களின் வழிபாட்டுணர்ச்சியை வளர்க்க வேண்டும் என்ற உணர்விலேதான் அருள் நெறித் திருக்கூட்டம் இயங்கி வருகிறது.

இன்று பலர் நன்மைசெய்வதாக நினைத்துக் கொண்டு பல தீமைகளைச் செய்கிறார்கள். இந்தப் புத்திசாலித்தனம் நம் நாட்டிலேதான் உண்டு.

நமக்கெல்லாம் இராமலிங்கர் மீது பக்திதானே! அவர் மீது பக்தியும், பாசமும் கொண்டுதானே நாம்இங்கே கூடியிருக்கிறோம். அவர்மீது காகிதப் பூவைப் போட்டால் அது போலிதானே! அவர் திருவுருவப் படத்தை அலங்கரிக்கும் தேரில் காகிதப் பூவைப் போட்டால் அது எதைக் காட்டும்? நாம் இன்னும் மணமிக்கவர்களாக ஆகவில்லை என்பதைத்தானே! வழிபாட்டில்-வழிபாட்டு நிகழ்ச்சிகளில்—வீட்டு நிகழ்ச்சிகளில் மணமிக்க மலர்களையும் மாலைகளையும் பயன்படுத்துவது ஏன்? மனிதனின் உள்ளுணர்வு மணமிக்க மலர்போல பூத்து, மலர்ந்து மணம் வீச வேண்டும் என்பதன் அறிகுறியாகத்தானே! கையிலே மலர்க் கொத்து (Bouguet) கொடுக்கிறோமென்றால், கையிலே இருக்கிற மலர்போல உள்ள மலரும் மணம் வீச வேண்டும் என்பதற்காகத்தானே? இப்படிச் செயலால் உணர்த்துவது (Practical Study) செய் முறைப் படிப்பு. பல ஆண்டுகட்கு முன்பே மதம் இந்தச் செய்முறைப் படிப்பை நடைமுறைக்குக் கொணர்ந்தது.

இன்று, திருமணவீட்டிலே பூ கொடுக்கிறோம்.

"இந்த மலரைக் கொடுக்கிறேன்; மலர், மணமும் இனிமையும், தண்மையும் மகிழ்ச்சியும் தருவதுபோல, உங்

செய்முறைப் படிப்பைப் பல்லாண்டுகட்கு முன்பே மதம் நடைமுறைக்குக் கொணர்ந்தது

களுக்கும்' எனக்கும் இருக்கிற உறவிலே மணம் இனிமை, தண்மை, மகிழ்ச்சி கவர்ச்சி எல்லாம் இருக்கட்டும் என்பதற்காகத்தான். இப்பொழுது கொடுக்கப் பெறுகிற துலுக்கன் செவந்திப் பூவின் மணம் போல உங்கட்கும் எனக்கும் உறவு இருக்கட்டும் என்றால், அது நடைமுறைக்கு ஒத்துவருமா?

விருந்தினர்க்கு மாலைபோடுவது சடங்கு. அந்த மாலையைப் பெற்றுக் கொள்ளுகிறவர் 'உங்கள் அன்பை-உறவைக் கண்ணின் இமைபோலக் காப்பாற்றுகிறேன்' என்பதன் அடையாளமாக மரியாதையாகக் கண்ணில் ஒற்றிவாங்கிக் கொள்ளவேண்டும். இப்பொழுது அணிவிக்கப்பெறுகிற மாலையைக் கண்ணிலே ஒற்றினால், மாலையில் சுற்றிக் கட்டப் பெற்றுள்ள காக்காய்த் தகடு கண்ணிலே குத்திக் காயப்படுத்தி விடும்.

'கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போக' என்று பாடினார் வள்ளலார். என்ன கண்மூடிப் பழக்கம்?

நம் நாட்டில பொதுவாக இருக்கிற ஒருகுறை ஏன் என்று கேட்டால் பாவம் என்கிற மனோபாவம். தாயை மகள் கேள்வி கேட்டால் தவறு! தகப்பனை மகன் கேள்வி கேட்டால் தவறு! ஆசிரியரை மாணாக்கள் கேள்வி கேட்டுவிட்டால் வந்தது ஆபத்து! இவற்றிற்கெல்லாம் மேலாக, மதத்தின் தலைவரை மக்கள் கேள்வி கேட்டு விட்டால் இந்த உலகமே பிரளயத்தில் அழிந்துவிடும். இங்கு மதத்துறையில் இருக்கிறவர்கள் மக்களை அச்சுறுத்தியதாலேயே இந்த நாட்டின் 'மதம்' கெட்டுப்போய் விட்டது. மக்களிடத்தே அச்சம் பரவியுள்ளது!

கேள்வி கேட்க முடியவில்லை. இதைத் தான் வள்ளலார் கண்மூடிப் பழக்கம் என்றார். பலருக்குக் கருத்தில்லை- கருத்தோடு தொடர்பும் இல்லை. கண்ணை மூடிக் கொண்டனர். எனவே கண்மூடிப்பழக்க வழக்கங்கள் மலிந்தன.

நம் நாட்டிலே அர்ச்சகர் வீட்டிலே அர்ச்சகன் பிறந்துவிடுகிறான். அவனுக்கு ஞானம் வேண்டாம்; ஒழுக்கம் வேண்டாம்; அறிவுகூட வேண்டாம். ஆனால். தாசில்தார் வீட்டிலே தாசில்தார் பிறப்பதில்லை—தண்டல் நாயகம் வீட்டில் தண்டல் நாயகம் பிறப்பதில்லை.

பொதுவாகப் பலரிடம் ஏன் செய்கிறீர்கள் என்றால் தெரியாது-எதற்காகச் செய்கிறீர்கள் என்றால் தெரியாது-இதைச் செய்ததால் நீங்கள் என்ன பயனைப் பெற்றீர்கள் என்றால் தெரியாது! இதைச் செய்ததால் எத்தகைய உணர்வைப் பெற்றீர்கள் என்றாலும் பதில் கிடைக்காது. இந்த நிலைமையில் பரவியிருந்த பழக்க வழக்கங்களைப் பார்த்துத்தான் 'கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப்போக' என்றார் இராமலிங்கர். இப்படி நாம் சொல்லுதால் பழக்கங்களை இராமலிங்கர் கண்டித்தார் என்று கூறுவதாகப் பொருளில்லை. பழக்கங்களை அவர் கண்டிக்கவில்லை. பழக்கங்களினாலேயே மனிதனின் உள்ளுணர்வு தூண்டப் பெறுகிறது. புறச்சடங்குகள் பழக்கங்கள் முதலியவற்றால், அமைந்து போய்க்கிடக்கிற அடங்கிப்-போய்க்கிடக்கிற - தம்பித்துப் போய்க்கிடக்கிற உணர்ச்சிகளை அசைத்து விட முடியும். தூண்டி விடமுடியும். எனவே அறிவிற்கும் அனுபவத்திற்கும் தொடர்பின்றி, சிந்தனைக்கும் செயலுக்கு தொடர்பின்றித் தன்னிச்சையாகச் செய்கிற செயல்களைத்தான் வள்ளலார் கண்டித்தார்.

இன்று பலருக்குப் புராணக் கதைகள் தெரியுமே தவிர தத்துவங்கள் தெரியாது. இடைக் காலத்தில் இந்த நாட்டில் சமயம், சமயக் கல்வி, தூய உணர்வு, சமயப் பயிற்சி இவற்றை யெல்லாம் யார் சொல்லிக் கொடுப்பது என்ற வரையறையின்றி, சொல்லிக்கொடுக்க உரிமை

மக்களை அச்சுறுத்தியதாலேயே இந்நாட்டின் மதம் சீர்கேடான நிலையுற்றது

சிந்தனைக்கும் செயலுக்கும் தொடர்பின்றி தன்னிச்சையாகச்செய்யும் செயலையே

யுடையவர் எல்லாம் தொழில் முறையில் மாறிப்போன பிறகு, சமயம் என்ற தேர் அக்குவேறு-ஆணி வேறாகப் பிய்த்தெறியப் பட்டுவிட்டது. இந்தச் சூழ்நிலையில்- இந்தக் காலகட்டத்தில் இராமலிங்கர் பிறந்தார். அவர் தோன்றிய காலமே அழுகிக் கெட்டுப் போயிருந்த காலம் தான். இராமலிங்கர் மீதுள்ள பக்தியின் காரணமாக ஒருகால் அவர் காலத்தை நம் பொற்காலம் என்று கருதிக் கொள்ளலாம். ஆனால், தமிழகம், கெட்டுப் போயிருந்ததை அவரே பல இடங்களில் நொந்து பாடியிருக்கிறார். அவர்காலம் ஒரு சோதனைக் காலம். அன்று, ஆறுமுக நாவலர் போன்றவர்களே இராமலிங்கரை எதிர்த்தார்கள் என்றால், பொறாமையினால் எதிர்க்க வில்லை. நாவலர் போன்றவர்கள் கொஞ்சம் பாரம்பரியமான வைதிக உணர்வுடையவர்கள் அவர்கட்கு வள்ளலார் போன்றவர்களின் சன்மார்க்க சமரச நெறி பிடிக்க வில்லை. நாவலர் போன்றோர், சாதி முதலிய எல்லாம் மறைந்து விடக்கூடாது என்பது போன்ற உணர்வுடையவர்கள். எனவேஎதிர்த்தார்கள்.

புதிய காற்று சிலருக்குப் பிடிக்காது; சிலர் உடம்புக்கு ஒத்துவராது—பிடிக்காது. என்றாலும், ஒரு சூழலை உருவாக்கித் தலைமீது சுமத்தி விட்டால் பின்னர் பரவாயில்லை என்று சொல்லி ஏற்றுக் கொள்வார். அரிசனங்களை ஆலயத்திற்குள் அனுமதியுங்கள் என்று அண்ணல் காந்தியடிகள் தொடக்கத்தில் கேட்டுக் கொண்ட போதெல்லாம் அதை உறுதியாக எதிர்த்து வந்த வைதிகர்கள், சட்டம் வந்த பிறகு பரிவட்டம் கட்ட ஆரம்பித்து விட்டார்கள். கடவுளுக்காக ஒத்துக்கொள்ளாதவர்கள் — நாட்டிலுள்ள பல்லாயிரக் கணக்கான மக்கட்காக ஒத்துக் கொள்ளாதவர்கள் சட்டம் வந்த பிறகு, சட்டத்தின் பேரால் வருகிற பிரதிநிதிக்குப் பணிந்து ஏற்று நடைமுறைப் படுத்த முன்வந்தால் சட்டம் பெரியதா? சாத்திரம் பெரியதா? மக்கள் நலன் பெரியதா? யாரோ ஒருவரின் நலன் பெரியதா?

(வளரும்)

முதல்தர அறிவு

சிந்தித்துப் பெறுகிற அறிவு முதல் தரமானது; ஏட்டுக்கல்வி மூலம் பெறுகிற அறிவு இரண்டாந்தரமானது; பிறவகையில் பெறுகிற அறிவு மூன்றாந் தரமானதே!

—அடிகளார்.

கண்மூடித்தனமென்றார் வள்ளலார்

தமிழகம்

கிழமை இதழ்

சிறப்பாசிரியர்:

தவத்திரு

குன்றக்குடி அடிகளார்

தவத்திரு அடிகளார் அவர்களின் சொல்லோவியங்களையும், எழுத்தோவியங்களையும் தாங்கி வெளிவரும் சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கிய ஏடு.

ஆண்டுக்கட்டணம் ரூ. 5

படிப்பகங்கள் பொதுச் சங்கங்கள் ஆகியவற்றிற்கு

ரூபாய் மூன்று மட்டும்

செலுத்தினால் போதும். தமிழகம் ஓராண்டுக்குத் தொடர்ந்து கிடைக்கும்.

......தகவல்கட்கு......

மேலாளர், 'தமிழகம்',

குன்றக்குடி

இராமநாதபுரம் மாவட்டம்

தமிழும் வேலைவாய்ப்பும்

டாக்டர் வ. சுப. மாணிக்கம்
M. A., M. O. L., Ph. D.

தமிழும் வேலைவாய்ப்பும்

"என்று தணியும் இந்த அடிமையின் மோகம்" என்றார் பாரதியார். நம் மக்களுக்கு அயல் மோகம் என்ற உணர்ச்சி பன்னூறாண்டுகளாக வளர்ந்து வேரூன்றி வருகின்றது. அயலரசு, அயல் நாடு, அயல் மொழி, அயலினம், அயல் நாகரிகம், அயல்இலக்கியம், அயற்சரக்கு என்றால் திடீரென்ற ஒரு மோகம் நம்மனோர்க்குத் தோன்றி விடுகின்றது. இம்மோகத்தைக் கூடியவரை குறைக்க உரிமை இந்தியா முனைய வேண்டும். விடுதலை பெற்ற பின்னும் அயல் மோகத்தை வளர்ப்பது அடிமைக்குப் பயிற்சி அளிப்பதாகும். இப்பேருண்மையை எல்லாத் துறையிலும் நம் அரசினர் சந்திக்க வேண்டும். இன்று கல்வித்துறையிலும் மொழித்துறையிலும் வேகமாகச் சிந்திக்கவேண்டும். அயல் மொழி மோகத்தோடு தாய் மொழிப் பற்றை மோதும்படி விடலாகாது. வேலைக்காப்பு நல்கித் தமிழ் பயிற்றுமொழியை உறுதிப்படுத்தி விரிவு செய்யவேண்டும். நாட்டு மொழிக் கல்வி உரிமைத் தேவையாகும். அயல் மொழிச் செல்வாக்கு அடிமையின் எக்களிப்பாகும். ஆதலின் தமிழ் பயிற்றுமொழி வெற்றியடைதற்கு உரிய வேலை வழிகள் ஒரு சில கூறுவன். தமிழ் வழிப்பட்டதாரிகளுக்கு எங்ஙனம் எல்லாம் வேலைகளை ஒதுக்கிக் கொடுக்கலாம் என்று தாராளமாக எண்ணுதல் அரசின் பொறுப்பு. என் கருத்திற்பட்ட சில வேலைகளை-உடனே நடைமுறைக்கு மேற்கொள்ளத்தக்க சில வேலைப் பகுதிகளை இங்கே குறிப்பிடுவன்.

ஆசிரியத் தொழில்

பல்லாண்டுகளாக உயர்நிலைப் பள்ளிப் படிப்பவரை தமிழ் பயிற்றுமொழியாக இருந்து வருகின்றது. வேதியல் பௌதிகம் மரவியல் விலங்கியல் உடலியல் கணக்கியல் முதலான அறிவியல்களும், திணைநூல் வரலாறு குடியியல் முதலான கலையியல்களும் இன்ன பிற துறைகளும் தமிழிலே கற்பிக்கப்படுகின்றன. உயர்நிலைப் பள்ளிகளில் இவற்றைக் கற்பிப்பதற்குக் கல்லூரிகளில் இத்துறைகளைத் தமிழிற் பயின்ற பட்டதாரிகள் தாமே பொருத்தமானவர்கள்? ஒரு துறையைப் படிக்கும்போதே தமிழ் வாயிலாகப் படிக்காவிட்டால், எப்படித் தமிழிற் சொல்லிக் கொடுக்க முடியும்? படிக்கும்போது தமிழிற் சிந்திக்காத ஒரு பட்டதாரி மாணவர்களை எங்ஙனம் சிந்திக்கவைக்க முடியும்? கல்வித்தரம் குறைந்து வருவதற்கு ஒரு காரணம் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழிற் சொல்லிக்கொடுக்குமாறு ஆங்கில வழிப் பட்டதாரிகளை நியமிப்பது. இம்முறை மாற வேண்டும். உயர்நிலைப் பள்ளி ஆசிரியத் தொழிலைத் தமிழ்வழிப் பட்டதாரிகளுக்கென்றே ஒதுக்கிவிட வேண்டும். தமிழ்வழிப் பட்டதாரிகளும் கல்லூரிகளில் ஆங்கில முதற்பகுதி கற்றிருப்பார்களாதலின், அவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் சொல்லிக் கொடுத்தற்கும் தகுதியுடையவரே. ஆதலின் உயர்நிலைப் பள்ளி ஆசிரிய வேலைகளைத் தமிழ்வழிப்பட்டதாரிகளுக்கு என்று நம் அரசு உறுதிப்படுத்த வேண்டுகிறேன். தரமான கல்வி வளர்ச்சிக்கும் தளராத தமிழ் வளர்ச்சிக்கும் இவ்வுறுதிப்பாடு நல்லது. இவ்வேலை வாய்ப்பை எவ்வளவு விரைவாக அளிக்கின்றோமோ அவ்வளவு விரைவாக மாணவர்கள் தமிழ் பயிற்றுமொழி வகுப்புக்களில் சேர ஓடி வருவார்கள் என்பது என் திடமான நம்பிக்கை.

அலுவலகத் தொழில்

தமிழகத்தின் எல்லா அலுவலகத்திலும் கூடிய விரைவில் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்பது நம் அரசின் அதிராக் கொள்கை. இக்கொள்கையினின்று அரசு பின் வாங்காது என்பது தெளிவாயிற்று. தமிழ் ஆட்சி மொழிக்கும் தமிழ் பயிற்றுமொழிக்கும் நீங்காத தொடர்பு உண்டு என்பதனை அரசினர் சிந்திக்குமாறுவேண்டுகிறேன். ஆட்சிமொழிக் குறிக்கோளின் வெற்றி பயிற்றுமொழிக் குறிக்கோள் வெற்றி பெறுவதைப் பொறுத்தது. ஆங்கில வழிப் பட்டதாரிகளை நெடுநாள் வைத்துக்கொண்டு, தமிழில் ஆட்சி நடத்த முடியுமா? செம்மையாகக் கொண்டு செலுத்த முடியுமா? விறகு வெட்டியைக் கொண்டு தோட்டத்தை வளர்க்கமுடியாது. பூனையைப் பாலுக்குக் காவலாக வைத்தலாகாது. எல்லா அலுவலகங்

களிலும் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமெனின், எல்லாக் கல்வித் துறைகளிலும் தமிழ் பயிற்று மொழியாக இடம் பெறவேண்டும் என்பது வெளிப்படை. அதற்கு ஒரு தோற்றுவாயாக, இதுவரை தமிழ் கொண்டு வரப்பட்டுள்ள அலுவலங்களில் எல்லாம் இனிமேல் தமிழ் வழிப் பட்டதாரிகளையே வேலைக்கு அமர்த்துவது என இப்போதே அரசு முடிவு செய்யவேண்டும். தமிழ் நடைமுறைக்கு வரும் புதிய அலுவலகங்களிலும் இம் முறையை நெடுகக் கையாள வேண்டும். அப்போதுதான் ஆட்சித் தமிழ் வேரூன்றும், கிளை விடும், பயன் தரும்.

வேண்டுகோள்

மேற் காட்டிய இரு வகையாலும் வேலைகளை ஒதுக்கி உறுதிப் படுத்தினால், தமிழ் பயிற்றுமொழி தானே விறெய்தும் வெற்றியடையும். தாழ்த்தப்பட்ட நம் மக்களுக்கு அளிக்கும் வேலைச் சலுகைகளைத் தாழ்த்தப்பட்ட நம் மொழிக்கும் அளிக்க அரசு முன் வருமாக! விதி செய்வதாகுக!

குடியரசு நாட்டில் தாய் மொழிகளைத் தோற்க விடாதீர்கள். தோற்க விட்டால் குடியரசும் மெல்ல மெல்லத் தோல்வியடையும். தமிழ் பயிற்று மொழி வெற்றியடைதற்கு முடிவாக எதனைச் செய்ய வேண்டுமோ அதனைச் செய்யுங்கள்! வெற்றி காணுங்கள்! என்று அரசியலாரையும் அறிஞர்களையும் ஆசிரியர்களையும் வேண்டுகின்றேன்.

★

தமிழகத்துக் கலையுலகம் பொருளுணர்வோடிலங்கவேண்டும்

காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தவத்திரு அடிகளார் பேச்சு

இசை, நடனம், ஓவியம் முதலான கலைகள் அனைத்தும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகும். கலைகள் வெறும் புற உணர்ச்சியோடு மட்டும் அல்லாது, அக உணர்ச்சியோடும் பயன் படுத்தப் பட்டால் தான் மனித வாழ்க்கை இன்புற்று விளங்கும்''

காரைக்குடியில் கல்லூரிகள் பல கண்டு புகழ் எய்திய வள்ளல் அழகப்பர் கலை ஆர்வம் படைத்தவர். அவருடைய எண்ணத்தின் விளைவாகக் கலை விழா சிறப்புற நடைபெறுவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். இருபதாம் நூற்றாண்டில் நாட்டில் கலை வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இசை, நடனம், கூத்து ஓவியம் முதலான கலைகளில் மக்களுக்கு ஆர்வம் உண்டாகியிருக்கிறது. புற உணர்ச்சியிலே ஈடுபட்டு விட்டதால் அக உணர்ச்சியில் வளர வேண்டும் என்ற நம்பிக்கை நாட்டில் குறைந்து விட்டது. தமிழகத்துக் கலை உலகம் வெறும் இசை, நடனம், கூத்து என்றில்லாமல் பொருள் உணர்ச்சியோடு வளர வேண்டும். நாட்டில் உள்ள கலைகள் பொருள் உணர்ச்சியின்றிப் பயனற்றுப் போகின்றன. இயற்கையையும் கலையின் உள் உணர்ச்சியையும் தெரிந்தவன் வாழத் தெரிந்தவனாகிறான். பழங்காலத்துக் கோவில்களில் உள்ள கலை அமைப்பை இன்று காண முடியவில்லை. சமய உலகம் புறப்பார்வைக்கு அகலமாக அழகாக இருக்கிறது. தன் இயல்பாகத் தோன்றும் சிந்தனை உணர்ச்சி மூலம் ஏற்படும் அறிவு தான் நிலைக்கும். அதுபோல கலை உலகத்துக்குச் சிந்தனை அதிகம் வேண்டும்.

''பழமையான மரபு காப்பாற்றப்பட வேண்டும். திரைப்படப் பாட்டுக்களில் நமது பழமையான பண்கள் காணப்படுகின்றன. இந்தப் பண்கள் காப்பாற்றப்பட வேண்டும். மனிதனைக் கவரும் வீணை, யாழ் இசைகள் இன்று இல்லை. பழங்காலத்துக் கோயில்களில் இசை அமைப்பு இருந்திருக்கிறது. வாழ்க்கையை இன்பமுடன் வெற்றிகரமாக நடந்த கலைகள் இன்றியமையாதன. கடவுளுக்கு அடுத்த இடம் கலைக்குக் கொடுக்கப்பட வேண்டும். அது மனிதனை உயர்த்துகிறது. கலைஞன் இறைவனின் பிரதிநிதி ஆகிறான். நடராசர் கூத்தில் இசை, நடனம், ஓவியம் முதலான அனைத்துக் கலைகளும் அடங்கியுள்ளன. கலைக்கும் அரசியலுக்கும் இடைவெளி காணப்படுவது கூடாது. கலையை வாழ்க்கையோடு அமைத்து, உயர்ந்த சமுதாயத்தைக்காண வேண்டும். அத்தகைய கலையுலகம் இன்று தேவை.

கிறித்தவப் பாதிரிகள் இயக்கம் வளர்ப்பதுபோல நாமும் வளர்க்கவேண்டும் என்பது அடிகளார் விருப்பம்

அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் கருத்துரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்முடைய சமயத்தையும் இயக்க ரீதியாக வளர்க்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் முதலியவர்கள் ஒரு 'மிஷன்' என்ற உணர்விலேதான் வேலை செய்திருக்கிறார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

பல்லாயிரக் கணக்கான தொண்டர்களோடு அவர்கள் சென்றார்கள் என்னும்போது ஒரு கூட்டம் என்று சொல்லும்போது அது மிஷன் ஆகிவிடுகிறது. திருக்கூட்டம் என்று நாம் குறிப்பிடுவதே 'மிஷன்' என்பதினுடைய தமிழாக்கம் தான்.

திருஞான சம்பந்தர் ஞானம் கைவரப்பெற்ற பிறகு, இறைவனைக்காணவேண்டும் என்ற நோக்கத்திலே நாடு சுற்றியதாக நாம் கருதமுடியாது. சீர்காழியிலே அவருக்கு இறைக் காட்சி கிடைத்துவிடுகிறது. ஞானியர் ஆனவர்கள் மீண்டும் திருத்தலயாத்திரை செய்கிறார்கள் என்றால் ஆங்காங்குள்ள மக்களைக் காண வேண்டும் என்றுதான் என்று கூறலாம். திருநாவுக்கரசர் திருமுறைகளிலே இதை இன்னும் வெளிப்படையாகக் காண முடிகிறது. 'மனிதர்காள் இங்கே வம்மொன்று சொல்லுகேன்!' என்கிறார். பிரசார தந்திரங்களைக்கூட அப்பரடிகள் அழகாக செய்திருக்கிறார். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் இயக்கத்தை நாம் ஒரு தனி இயக்கமாகப் பார்க்காமல், மிஷனரி இயக்கமாக வளர்த்தார்கள் என்றே கூறலாம்.

குழந்தைகளிடத்திலே நல்ல சமய உணர்வை வளர்த்தால் பிற்காலச் சமுதாயம் நன்றாக இருக்கமுடியும் என்று நாம் கருதித்தான் சமயப் பாடங்கள் முதலியவற்றை நடத்தி வருகிறோம்.

1000 ஆண்டுக்காலவரலாற்றிற்குப் பிறகு திருமுறைகளாலும் இறைவனை வழிபடலாம் என்ற கருத்தை அரசு ஏற்றுக்கொள்ள நடைமுறையில் நமக்குப் பெருந்துணையாக இருந்து நிறைவேற்றித் தந்த ஆணையர் அவர்கள் இன்னும் நமது காரியங்கள் வெற்றிபெற உறுதுணையாக இருப்பார்கள் என நம்புகிறோம்.

திருமுறைகளை இந்த நாட்டு மக்கள் தமது வாழ்க்கை மறைகளாக ஏற்றுக் கொள்ளும்வரை நமது இயக்கம் தொடர்ந்து நடைபெறும். ஒவ்வொரு' வீட்டிலும் திருமுறைக் கோயில் இருக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் காலையிலும் மாலையிலும் திருமுறை வழிபாடு நடைபெற வேண்டும். அதுவரை இவ்வியக்கம் தொடர்ந்து நடைபெறும். என்றார்கள். பின்னர் பயிற்சிப்பள்ளி மாணவியர், உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ஆகியோரின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

பின்னர், ஆணையர் அவர்கள், போட்டிகளில் கலந்து கொண்டவர்கட்குப் பரிசுகளை வழங்கிவிட்டு தவத்திரு அடிகளார் அவர்களின் 'குறள் வாழ்வு' என்ற நூலை வெளியிட்டுப் பேசினார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது; இந்நூலை எல்லோரும் பொன்னே போல் போற்றி இதில் உள்ள கருத்துக்களைச் சிந்தித்து ஏற்றவற்றை ஏற்றுக்கொண்டு வாழ்ந்து காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"குறளை மறுப்போர் இங்கு யாரும் இல்லை - அது எக்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

அடிகளார் சைக்கிளில் சென்றார்கள்

காரைக்குடி அழகப்பா கல்லூரியில் நடைபெற்ற கலை விழாவிற் கலந்துகொள்ள தவத்திரு அடிகளார் அவர்கள் காரில் சென்று கொண்டிருந்தார்கள். வழியில் கார் ரிப்பேர் ஆகிவிட்டது. கார் ரிப்பேர் முடிய சற்று நேரமாகும் என்று கருதியதாலும், விழாவிற்குச் சரியான நேரத்தில் போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்று விரும்பியதாலும், தவத்திரு அடிகளார் அவர்கள் ஒரு சைக்கிளில் அங்கிருந்து புறப்பட்டுக் குறிப்பிட்ட நேரத்தில் விழாவிற்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

காலத்துக்கும் பொருந்தும் நூல்.

"குறள் வாழ்வு மட்டும்வாழ வேண்டும் என்பது அடிகளாரின் விருப்பமல்ல என்பதை நாம் அறிவோம். திருமுறை வாழ்வு வாழவேண்டும் என்பதும் அவர்களது விருப்பம்.

"இங்கு பேச்சும் நாடகமும் திருமுறையைப் பற்றியே இருந்தன. திருமுறைச் சிந்தனைகளே இவ்விடத்தில் நிலவி வந்திருக்கின்றன. நமது அடிகளார் கிறித்தவப் பாதிரிமாரின் இயக்கத்திலிருந்து பல கருத்துக்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இயக்கத்தை எப்படி ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் நடத்துகிறார்கள் என்பனவற்றையறிந்து அவற்றையெல்லாம் நாமும் கையாளவேண்டும் என்பது அவர்கள் விருப்பம்"

இவ்வாறு கூறி, சிவகங்கை துணை நீதிபதி திரு. கௌதபடா, திருப்புத்தூர் சப் மாஜிஸ்டிரேட் திரு. டி. ஜி. ரெங்கநாதன், மதுரை அறநிலைய துணை ஆணையர் திரு. ஏ. சர்க்கரை சேர்வை ஆகியோருக்கு 'குறள் வாழ்வு' என்ற நூலை வழங்கினார்கள்.

பின்னர், தவத்திரு அடிகளார் அவர்கள் அனைவர்க்கும் நன்றி நவில விழா இனிது நிறைவெய்தியது.

விராலிமலை தமிழ் மன்றம்

விராலிமலை தமிழ் மன்றத் துவக்க விழா 24—10—63ல் குறிச்சி திரு. சுப. முத்தையா தலைமையில் நடைபெற்றது. தவத்திரு அடிகளார் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். திரு இரா. இராதாகிருட்டினன் எம். ஏ. பேசினார். செயலர் நன்றி கூறினார்.

ஸ்ரீ சண்முகநாதப் பெருமானுக்குப் கோடியருச்சனை

அறநிலைய ஆணையர், துணை நீதிபதி ஆகியோர் வருகை புரிந்தனர்

குன்றக்குடி ஸ்ரீ சண்முகநாதப் பெருமானுக்கு 21-10-63ல் கோடி அருச்சனை தொடங்கி நடைபெற்று வருகிறது. 4-11-63 முடிய 3 லட்சத்து 73 ஆயிரம் அருச்சனைகள் நடைபெற்றுள்ளன. 3-11-63ல் அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்களும், உதவி துணை ஆணையர் திரு.ஏ. சர்க்கரைசேர்வை அவர்களும் சிவகெங்கை துணை நீதிபதி திரு. கௌதபடா அவர்களும், திருப்பத்தூர் சப் மாஜிஸ்டிரேட் திரு. டி. ஜி. ரெங்கராஜன் அவர்களும் வருகை புரிந்து தரிசித்து வழிபாட்டைப் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

2-11-63 கார்த்திகையன்று பெருந்திரளான பக்தர்கள் வந்திருந்து தரிசித்து கோடி அருச்சனையில் பேரார்வம் காட்டியது குறிப்பிடத்தக்கது.

காவேரிநகர் பாரதி விழா

காவேரி நகர் திரு. வி. க. மன்றம், கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவு மன்றம், தியாகி சண்முகம் படிப்பகம், ஜனநாயக வாலிபர் சங்கம் ஆகியவற்றின் ஆண்டுவிழாவும், பாரதி விழாவும் 3-11-63ல் திரு எஸ். எம். நடராசன் தலைமையில் நடைபெற்றது. திரு. என். லெட்சுமணன் அனைவரையும் வரவேற்றார். திரு. ரகுநாதன் 'கைவருந்தி உழைப்பவர்தெய்வம்' என்ற தலைப்பிலும், திரு எம். எஸ். நாடார் 'செப்பு மொழி பதினெட்டுடையாள்' என்ற தலைப்பிலும் குமாரி சிவகாமசுந்தரி எம். ஏ. 'இனியொருவிதி செய்வோம்' என்ற தலைப்பிலும் உரையாற்றினார்.

பின் தவத்திரு அடிகளார் அவர்கள் 'சிந்தனை ஒன்றுடையாள்' என்ற தலைப்பில் அரியதோர் உரையாற்றினார்கள்.

திரு. என். எஸ். சண்முகம் அனைவர்க்கும் நன்றிகூறினார்.

அழகப்பா கல்லூரி கலை விழா

காரைக்குடி அழகப்பா கல்லூரிப் பேரவையின் சார்பில் 1-11-63ல் கலை விழா சிறப்பாக நடைபெற்றது. திருச்சி மாவட்டத் துணை கண்காணிப்பாளர் திரு. மு. இராமநாதன் தலைமையில் தவத்திரு அடிகளார் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார்கள். சிவகெங்கை அரசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. சி. இராமாநுசம் சொற்பொழிவாற்றினார். மாணவர் தலைவர் திரு. சி. இராமநாதன் வரவேற்றார். பேரவைச் செயலர் திரு மு. தியாகராசன் நன்று கூறினார்.

Registered No. M. 7058 THAMILAGAM - Weekly 4-11-63

அடிகளார் சுற்றுப்பயணம்

நவம்பர், 63.

8 பரமக்குடி

9 திருச்சி

12—13 நாகர்கோவில்

16 சிவகெங்கை தாலுகா

17 புதுக்கோட்டை

சண்முகநாதபுரம்

வெளியிடுவோர், ஆசிரியர்: ஆறு. சுப்பிரமணியன், அடிகளார் அச்சகம், குன்றக்குடி, இராமநாதபுரம் மாவட்டம். துணை ஆசிரியர்: சாமி பழனியப்பன்.